131

# சுந்தரபுரிச்
# சுந்தர மலர்

ஆக்கியோன்:

S. ஆதிநாராயணன் பிள்ளை,

ஆனைமலை.

சரவணபவன் பிரஸ்,

பொள்ளாச்சி.

1939.

OFFICE OF THE REGISTRAR ... 1 JUL 1939 ... MADRAS

சிவமயம்.

ஆஸ்ரீள ஸ்ரீல திருவாளர்

A. V. சுந்தர முதலியார் அவர்களுடைய

# சரித்திரச் சுருக்கம்.

செந்தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய பல நாடு களிலும் தனிச் சிறப்பு வாய்ந்த கொங்கு நாட்டின் மேல்பால் மேல் கொங்கு நாட்டிற்கு முக்கிய நகரமாக விளங்கும் **கோவன்புத்தூர்** என்கிற கோவை நகருக் குத் தென் பாரிசத்தில் சிறந்து விளங்கும் **அரசிபாளை யத்தில்** புகழுடன் வாழ்ந்த தொண்டமண்டல கொண் டைகட்டி வேளாள குலதிலகராய் இருந்த வித்துளா கோத்திரம் திரு. **வேதநாயக முதலியாருக்கும்** அவர் பத்தினியார் திரு. **அலமேலு அம்மாளுக்கும்**

சகம் 1811 வெகுதான்ய வருடம், மார்கழி மா தம் 12-ம் தேதி புதன்கிழமை, வளர்பிறை, துதியை 49-20 பூராடம் 9-15 இரவு $23\frac{1}{2}$ நாழிகைக்கு விருச் சிக இலக்கினத்தில்

3947

2563
894.814

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>சனி</td><td colspan="2" rowspan="2">இராசி.</td><td>கே</td></tr>
<tr><td>வி. சந்<br>இரா</td><td></td></tr>
<tr><td>சு குரு</td><td>ல செ<br>பு மா</td><td></td><td></td></tr>
</table>

அவதரித்து, குழந்தைப் பருவம் கடந்து, பிள்ளைப் பருவம் அடைந்து,

"மக்கள் தந்தைக் காற்று முதவி இவர் தந்தை
என்னோற்றான் கொல்லென்னும் சொல்"

என்ற திருக்குறளுக்கு இலக்காகக் கல்வி பயின்று தமிழ் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் வல்லுநர் ஆகி, தன் பெற்றோர், தன் உற்றார், தன் சுற்றத்தார், உபாத்தியாயர், குரு முதலிய எல்லோருக்கும் நல்லவர் எனப் பெயரெடுத்து விளங்கி வாழும் காலத்தில், மணப்பருவம் அடைந்து எவ்வறத்தைக் கடைப்பிடிப் பதெனச் சிந்தித்து

"இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு"

என்ற குறட் பாவையும், "இல்லறமல்லது நல்லறம் அன்று" என்னும் ஔவையார் வாக்கையும் நோக்கி, தனக்கு ஒத்த குடியும், குலமும், குணமும், ஒழுக்கமும் கல்வியும், அழகும், திருவும் பொருந்திய அணங்கினைத்தேடி இருந்த ஞான்று, திருவருள் கூட்ட ஆம்பிர நதிக் கரையில் அழகார் சோலைகள் சூழ் ஆனைமலை என்னும் அணி நகரில் சீரும் சிறப்புடன் சிறந்து விளங்கிய தொண்டமண்டலம் கொண்டைகட்டி வேளாண் குலத்தில் தென்னவராயர் குடியில் ஆங்கில அரசர்களால் சன்மானிக்கப் பெற்ற திருவாளர் வெங்கடாசல முதலியார் பேரர் ஆகிய திருவாளர் சுப்பராய முதலியாருக்கும், தம் தமக்கை திரு. மகமம்மாள் கருவயிற் போந்த தவப் புத்திரி திரு. பொன்னுத்தையம்மாள் எனும் திருப்பதியம்மாளைத் தக்க பெரியார்களைக் கொண்டு மணம் பேசி, வதுவை முடித்து இல்லறம் நடத்துங் காலத்தில், செல்வன் வெங்கடாசலம் எனும் ஓர் ஆண் மகவையும், திரு. சூரியம், மங்களம்,

மனோரஞ்சிதம் என்னும் மூன்று பெண் மக்களையும் பெற்றெடுத்து, திருவாளர் சுப்பராய முதலியாருக்கு ஆண் மகவு இல்லாமல் இருப்பதைநோக்கி ஆனைமலை யிலேயே தங்கி தமது மூத்த புதல்வி திரு. சூரியம் அம்மாளுக்கு தக்க வரனைத் தேடி சேலம் ஜில்லா நாமக்கல் தாலுகா கஸ்பா நாமக்கல்லில் இருக்கும் வக்கீல் வெங்கடபதி முதலியார் குமாரர் திருவாளர் V. பொன்னம்பல முதலியார் B. A. மாஜி கடலூர் பஞ்சாயத் ஆபீசர் அவர்களுக்கு மணமுடித்து தமது பிற்கால வாழ்க்கையை நடாத்தி, ஆனைமலையில் உள்ள நேஷனல் பாங்கு, ஆனைமலை யூனியன் பாங்கு, ரேட்பேயர்ஸ் அசோசியேஷன், ஆனைமலை காங்கிரஸ் சபை முதலியவைகளுக்குத் தலைவராய் அமர்ந்து அதிகாரம் நடத்தியும் ஆனைமலை சுந்தரபுரி இராஜேந்திரா டாக்கீஸ் தியேட்டரைச் சொந்தத்தில் கட்டி தமது பெண் வயற்றுப் பேரன் சிரஞ்சீவி இராஜேந்திரன் பெயர் வைத்து நடத்தியும், தமது பேரனாகிய திரு. இராஜேந்திரனை தமது இல்லிலேயே இருக்க ஏற்பாடுகள் செய்தும், தமது திருக்குமாரி சூரியம் அம்மாளை தமது இரண்டாவது மகனாகப் பாவித்து நடாத்தியும், ஆனைமலை திரௌபதாதேவி விழாதோறும் ஆயிரக்கணக்கான மக்கட் கன்னதானமும், ஆனைமலை விஸ்வநாத சுவாமிகட்கு ஆண்டாண்டனுபிடேகமும், இவ்வண்ணமே பேரூரில் பட்டீசற்கும் பச்சைநாயகிக்கும் திருக்கல்யாணோற்சவமும், சமாராதனை, திருவாசக தேவாரப் பாராயணாதிகளும் நடத்தி ஓர் இல்லறத் துறவியென யாவரும் இசைக்க சகலருக்கும் நல்லவர் எனப் பெயர் எடுத்து, தமது 61-ம் ஆண்டில் நாளது வெகுதானிய வருடம், தை மாதம், முதல் தேதி தசமி, விசாகத்தில் தாம் கட்டி முடித்த இராஜேந்திரா தியேட்டரிலேயே தமது மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்களுடன் அளவளாவிக்கொண்டு இருக்கும்போதே யாதொரு ஆயாசமுமின்றிச் சிவபெருமான் பெரும் பதத்தை அடைந்தார். அவருடைய

ஆவி சிவபதத்தில் சாந்தி பெறுக. ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பன்,

ஆனைமலை, 25—1—39. } S. ஆதிநாராயணன் பிள்ளை, உபாத்தியாயர்.

# புகழ்மொழி.

சுந்தர மாபுரியிற் சொல்லார் திருப்பொலியும்
மந்திரத்தால் ஆகுமோ மாண் பொருள்கள்—எந்திரத்
ஆனைமலை யாதியுளார் அன்புடனே கண்டிடவே [தால்
மாழைகொடு வந்திடுவீர் மன்.

இராஜேந் திராடாக்கீஸ் ரஞ்சிதமாய்க் காசினியிற்
காசேந்தி நிற்குங் கணக்காலே—வீசுபுகழ்
ஆனைமலை அன்பர் அனைவோரும் வந்திடுவீர்
தானையொடு காணவே தான்.

என அறைகூவி அழையா நிற்கும் சுந்தரபுரியையும், சுந்தர விலாச ரைஸ் மில்லையும் இராஜேந்திரா டாக்கீஸையும் தோற்றுவித்து, நாளது வெகுதானிய வருடம் தை மாதம் முதற்றியதி சனி வாரம் நள்ளிரவில் ராஜேந்திரனிடமே கலந்து நிற்கும் ஸ்ரீமான் A. V. சுந்தர முதலியார் என்பார் சிற்றரசரேறெனச் சித்தூர் வாழ்ந்த பெரியாரின் வழிவழித் தோன்றலாய், இவ்வானைமலைக் கிரு கண்களாய், புகழ்மிக்கச் சீமான்களாய், புண்ணிய காரியம் பலபுரியும் புண்ணியோத்தமர்களாய், சைவம் போற்றும் சைவப் பெரியார்களாய், தான தருமம் புரியச் சலியாத வள்ளல்களாய், ஆலயங்களியற்றும் அரிய பணியே அணியெனக் கொண்டு விளங்கிய கோதிலா மணிகளாய்,

தானம் பலவற்றிலும் அன்னதானமே சாலச் சிறந்த
தென ஆனைமலையோர்கட் குணர்த்திய அரியபெரிய
ஆசான்மார்களாய், நாளும் தொண்டர் பெருமைகளைக்
கேட்டு மகிழ்வதே பொழுது போக்கெனக் கொண்டு
நின்ற குணக் குன்றுகளாய், பிரதி மாதமும் தம தகத்
தில் நாயன்மார்களது குருபூஜா விழாக்கள் கொண்
டாடிப் பந்து மித்திரர் உண்டு களிக்க அறுசுவை
உண்டி அகமகிழ்ந்தளித்துவரும் அண்ணல்களாய்,
எந்தைக்குகந்த இஷ்டர்களாய், எந்தையைத் தமது
சமஸ்தான வித்துவானாய்க்கொண்டு மகிழ்ந்த கொற்ற
வர்களாய், சதா திருநீறும் கண்டிகையும் திருவெனப்
பொலிந்து விளங்கும் திருமார்பினர்களாய், சைவர்
பெரியார்களெனச் சகல ஜனங்களும் போற்றிசெயும்
புண்ணிய புருஷர்களாய், அஷ்ட ஐஸ்வரியங்களும்
அகலேன் அகலேன் என வலிய வந்து தழுவ நின்ற
சற்சனர்களாய், அக்காலத்தில் அரியபெரிய கவி அர
சாக விளங்கிய கம்பநாட்டாழ்வாரால் "கண்ணினைக்
காத்த இமையிற் காத்தனர்" என விதந்தோதிய
ஆரிய வேந்தர்களான இராம லக்குமணரை மான இக
பரவேள்விகளை முன்னையப் பெரியார் இருந்தவிடத்தில்
அசையாதிருந்தும் பின்னையப் பெரியார் சட்டை தலைப்
பாவும் சார் சோமன் வாச்சுடனே சகல இடங்கட்கும்
சென்று பின் தமயனுடன் தழுவிக்காத்த, தாட்டிகம்
மிக்க தமிழ் வேந்தர்களாய்த் திகழ்ந்த ஸ்ரீமான் L.
வெங்கடாசல முதலியார், L. சுப்பராய முதலியார்
எனும் இரு பெரியார்களில் பின்னவராகிய L. சுப்ப
ராய முதலியாரவர்கட்கு மாண்பு மிக்க மனைக் கிழத்தி
யாய்த் திகழ்ந்த ஸ்ரீமதி மகமாத்தம்மாள் என்னும்
மாது சிரோன்மணியின் திருவயிற்றுதித்த திவ்யாலங்
கிருத பூடணியாய் விளங்கா நிற்கும் ஸ்ரீமதி பொன்
னுத்தையென்றும் திருப்பதி அம்மாள் என்றும் பெ
யர்களைப் பெற்ற திருவினைக் கைப்பிடித்த சீமானவார்.
இன்னவரான A. V. சுந்தர முதலியாரவர்கள் தாம்
கைக்கொண்ட திருவின் வலிமையாலும், அரசு புனர்

ந்து நிற்கும் பாளையத்து வேதத்தின் நாயகமாக விளங்கிய பெரியாருக்கும் அணி மிக்க ஸ்ரீமதி அலர்மேல் மங்கையார் எனும் அம்மையாருக்கும் ஐந்தாவது புத்திரராக அவதரித்த ஆண்மையாலும், மாதுலன் மார்களது மாட்சிமை விளங்க நடந்து வந்ததுமன்றித் தமிழன்னையைப் பெரிதும் விரும்பி அவ்வன்னையை வளர்ப்பான் காரணமாகவும், அவ்வன்னையின் புதல்வர்களைப் போற்றுவான் காரணமாகவும், "நடராஜர் சங்கம்" "பொது நிலைக் கழகம்" "இராமகிருஷ்ண விவேகானந்த நிலையம்" "சிவானந்தாச்சிரமம்" என்னும் மகுடங்கள் புனைந்த பல தமிழ்ச் சங்கங்களை நிறுவத் தோன்றாத் துணையாய் நின்றுதவியதோடு அவ்வவ் வமயங்களின் அக்கிராசனரும், பிரசங்கியுமாய் அணி செய்யா நின்று வந்ததுமன்றிக் காங்கிரஸ் பிரஸிடென்ட் எனும் கண்ணியமுந் தாங்கிக் கவிகளால் போற்றப்பட்டு வந்த புண்ணியப் புருடர் ஆவார். இவரையும், இவரது கொடையையும் புகழ்ந்து இவ் ஆனைமலைத் தமிழ்ப்புலவரும் எனது பிதாவுமான A. சிவசூரியன் பிள்ளை அவர்கள் பாடிய பாடல்கள் வருமாறு

இவரைப் பஞ்சரத்தினத் தொன்றெனப் பாடியது.

## வெண்பா.

நம் ரங்க ராமரொடு நற்சீனி வாசுவக்கும்
எங்கள்கோ விந்தராஜ் என்பவரும்—சுந்தரஞ்சேர்
சுந்தரப்பேர் பெற்றவரும் சொல்வேத நாயகமும்
பஞ்சரத்ன மாமெனவே பார். எனவும்,

இவரது கொடையைப்பற்றியவை.

## வெண்பா.

சுந்தர மென்னும் முதலியார் சொந்தமுடன்
எந்தனுக்கு நெல்லளித்தார் கையிதே—மைந்தர்முதல்
மாமனையும் மற்றவரும் வாழ வரம் அளிப்பான்
தே மன்னும் கொன்றையணி தே.

தேவென நின்னை அறியார் சிறியரென
நாவென்றும் காட்டும் நலத்தைஇனிக்—காவெனவே
பஞ்ச தருவளரும் பாக்கியத்தைப் பெற்றிடவே
செஞ்சரண் பூண்பார் தெரிந்து.

தெரிந்தெதையும் செய்வார் சிறந்தோர் சிறியர்
பிரிந்தென்றும் வாழப் பிழையை—இரிந்திடவே
மற்றவர்க்குச் செய்தே வயிறு வளர்ப்பரெனப்
பற்றற்றார் சொல்வர் பரிந்து.

ஆனைமலை,
15-3-1920.

A. சிவசூரியம் பிள்ளை,
ஸ்கூல் தமிழ் பண்டிட்.

"பாடல் பெறுனேல் பலர் புகழ வாழானேல்" எனக்கிளத்திய தமிழ் மூதாட்டியாரது முதுமொழிக்கிணங்க வாழ்ந்த பெரியாராகிய திருவாளர் A. V. சுந்தர முதலியாரவர்கள் இவ்வூர் மாட்டும், ஊரார், உற்றார், பெற்றார், உடன் பிறந்தார் மாட்டும் வைத்த அன்பைப் பிரிந்து அரனடி புக்கதை என்னென்பேன் ஆ! ஆ! இதுவும் ஈசன் திருவிளையாட்டோ!

தண்ணளி மிக்க பெரியோய் நினது ஆத்மா
சாந்தி பெறுவதாகுக.

எனது ஆற்றொணாத்துயர மொழியை உமதன்பார்ந்த குடும்பத்தார்க் கறிவிக்க இடந்தந்து நின்ற நினதன்பையும் நிமலனதருளையும் நிமிடமும் மறவேன். ஓம் சாந்தி சாந்தி.

அன்பன்,

ஆனைமலை,
26—1—39.

S. ஆதிநாராயணன் பிள்ளை,
உபாத்தியாயர்.

ஆனைமலை C S. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள் கூறிய

# இரங்கற்பா.

நல்லரசு பாளையத்தே நம்வேத நாயகமால்
செல்வப் புதல்வனெனுஞ் சீமானே—வல்லரசாம்
எல்சுப்ப ராயமால் ஈன்றதவக் குன்றுகும்
சொல்லரசி நாயகனே சோ.

சோகம் பொறுக்கவில்லை சுந்தரமே என்னப்பா
தேகமதை நீக்கிநீ தேங்கவைத்தாய்—நாகவரை
செய்த குறையோ சிறியனேன் செய்பிழையோ
அய்யவோ சென்ற வறம்.

அறம்வளர்ப்பாய் என்றிருக்க ஐயையோ காலனென்
திரம்பெற்ற உன்னுடலைத் தீக்கே—பெறவிட்டாய்
கற்றகலை எங்கே கனமிகுசம் பத்தெங்கே
பெற்றவா பிள்ளைக்கென் பேச்சு.

பேச்சற்று மூச்சற்றுப் பேரார் தியேட்டரிலே
வீற்றிருக்கக் காணல் விதிவசமோ—போற்றியவுன்
தானமும் பூஜையுந் தாங்காத பூவிலுளார்
வானவர்க் கீந்தனரோ வந்து.

வந்துகண்ட மாநகர் வயிறெரிந்தே கண்ணீர்தான்
சிந்திமிகத் துக்கித்துச் சீமானே—என்றழைத்தும்
சொந்தமுகங் காட்டாமல் சோர்ந்திட்டாய் ஆதலினல்
எந்தவிதஞ் செய்வான் ஈசன்.

ஈசன் செயலாலே என்மாமன் சண்முகமால்
நேசமது கொள்ளவோ நீசென்றாய்—பாசமுடன்
அன்றரும் நீரும் அணிபெறவே வாழ்ந்திட்ட
நன்றரே ஈர்த்ததென நாடு.

நாடுபுகழ் நன்கருகி நல்ராஜ லட்சுமியும்
பீடுபெறும் பேரருந்தான் பேசிடினே—கூடுதொறும்
பாட்டபாட் டாவெனுமே பச்சமுள மாமாவே
காட்டாயோ என்னும்மே கண்.

கண்மணியாம் பெண்மணியுங் கால்வழியாம் சுப்ராயன்
மண்புகழும் லச்மணனும் மாமனந்தான்-கொண்டிங்கே
பல்காலம் வாழ்ந்திடவே பாமரருங் கொண்டாடப்
பல்லாண்டு கூறிடுமே பார்த்து.

பார்த்தும்மை இல்அறத்தின் பக்காத் துறவியென்றே
நேர்த்தியுடன் கூப்பிட்ட நேர்மையெங்கே-கீர்த்தியிது
போதா தெனநினைந்தோ போகமிகு நாடுற்றாய்
சூதான தீதலவோ சொல்.

சொல்அன்ன தானமும் சோறும் அபிடேகம்
எல்லோரு முண்ண வியற்றியே—நல்லீசர்
நாயகிக்கு நாங்காணப் பேரூரில் நன்மணமும்
நேயமுடன் செய்தனையே நின்று.

நின்றே துதிக்க நிலையாகும் தேவாரம்
மன்னுதிரு வாசகமும் மாமகிழ்வாய்—அன்னமுடன்
பேரூரிற் செய்யப் பெரியபொருள் ஈந்தனையே
யாரூரிற் செய்தார் அறி.

C. S. சுப்பிரமணிய முதலியார்,

**25—1—39.** ஆனைமலை.

எனது பாட்டனார் V. சுந்தர முதலியார்
தேக வியோக மானமை குறித்து

# இரங்கிய இரங்கற்பா.

எந்தன் குலக்கொழுந்தே இந்திரனும் சுந்தரமே
கந்தங்கமழ் மார்பா கண்ணியா—பந்துவெமை
நீக்கிப் பரமபதம் நீயடையப் பார்த்தயாம்
ஏக்கமது கொண்டோம் இருந்து.

இருந்தழுத மக்களும் இல்லாளும் யாமும்
வருந்திமிக வாடிடவே வைத்துப்—பொறுத்தனையே
எந்நாளில் இங்கும்மை எங்கப்பார் என்றழைப்பேன்
அந்நாளும் நன்னாளாம் அன்பு.

அன்பின் வடிவே அழகுநிறை சுந்தரமே
துன்பமினிச் சகிக்கோம் தூயோனே—மன்பெரியர்
உம்மைப்போல் யாங்காண உண்டோ உலகிடையே
செம்மைப்பேர் பெற்றிடவே செப்பு.

செப்புத் தனத்தார் செழித்திருக்கச் சேயுடனே
இப்புவியில் வாழ்ந்த இறைவனே—எப்படிநீ
எங்களையேநீக்க இசைந்தனையோ எண்ணுங்கால்
தங்களையே போற்றல் தகும்.

தகும்படி வாழ்ந்த தனவானே தக்கார்
வெகுவிதம் எண்ண விசனம்—மிகுமால்
சொகுசுள உந்தனைச் சொற்பனத் தேனும்
புகும்படி காணலே பொற்பு.

பொற்புற்ற சொல்லும் புகழுற்ற நன்னடையும்
மற்குற்ற தோளும் மலர்முகமும்—எற்குற்ற
உள்ளங் குடிகொண் டுறுத்துதே ஒய்யாரா!
கள்ளங் கபடிலையோ காண்.

காணும்படிக்கு நீகட்டிவைத்த ரைஸ் மில்லும்
தோணும் ராஜேந்திரா டாக்கீஸும்—காணுமவர்
நின்நாமம் வாழ்த்தி நிலையான வாழ்வெய்தத்
தன்னருணை தந்திடுமே தான்.

தான தருமத் தயாளனே தாரணியில்
போனகம் ஈந்தே புரந்தனையே—யான்காணத்
தொண்டர் புராணமும் தூயதிருப் புகழுங்
கொண்டுபா ராயணஞ்செய் தாய்.

தாய் போற்றுதித்திடவே தந்திவரை மக்கள்தாம்
வாய்மையுடன் வாழ்த்த வளர்ந்தனையே - தூய்மையு
எல்லோரும் வாழ இறைவனைப் போற்றுவாய் [ளாய்
சொல்லாரும் பாக்கொண்டே சூழ்ந்து.

V. S. சோமசுந்தரம்,

25—1—39. உபாத்தியாயர், ஆனைமலை.

கணபதி துணை.

சுந்தரபுரி இராஜேந்திரா தியேட்டர், சுந்தர விலாஸ ரைஸ் மில் இவைகளின் கர்த்தாவான ஆனை மலை ஸ்ரீமான் A V. சுந்தர முதலியாரவர்கள் பரம் பொருளிற்கலந்தமை காரணமாக அவர்களது குடும் பத்தாருக்கு S. ஆதிநாராயணன் பிள்ளை உபாத்தியா யர் தெரிவித்துக்கொள்ளும்,

## அநுதாபப் பத்திரம்.

### வெண்பா.

சுந்தர மாபுரிக்குச் சொந்தமுள சுந்தரமே!
இந்தவிதஞ் செய்யவா இங்குற்றாய்—பந்தந்தான்
எங்கள்பால் இல்லையோ? ஏன்வைத்தாய் ஏங்கியழ?
தங்கநிறச் சாமியே சாற்று.

சாற்றும் வெகுதான்யம் சார்வற் சரமகாம்
போற்றும் முதற்றியதி போகநா—டேற்றனையே
வீற்றிருந்த நேயரும் வீட்டாருங் கேட்டழவே
கூற்றுவனுந் தொட்டனனே கூறு.

கூறும் மொழிஎங்கே! கூசா நடையெங்கே!
யாருந் தொழநிற்கும் ஆண்மையெங்கே—பேருலகில்
நீர்படைத்த பேரெங்கே! நீள்கொடைதான் எங்கே
யார் பொறுப்பார் இத்துக்கம் அப்பா! [யோ

அப்பாவென வழைக்கும் ஆணழகன் வேங்கடமால்
எப்படித்தான் தாங்கினரோ இத்துன்பம்—அப்பப்பா!
மங்களமுஞ் சூரியமும் மாமனோ ரஞ்சிதமும்
எங்கள் பொன் னுத்தையுமே ஈங்கு.

ஈங்குன் பெயரால் இயங்குகின்ற ரைஸ்மில்லும்
ஓங்கியரா ஜேந்திரா ஒண்தியேட்டர்—தாங்கொணுத்
துக்கத்தால் வாடியே சுந்தரமால் என்றழைத்தும்
பக்கத்தில் வாராதென் பாங்கு.

அன்பன்,

S. ஆதிநாராயணன் பிள்ளை,

25—1—39. உபாத்தியாயர், ஆனைமலை.

# சஷ்டி பூர்த்தி.

24—12—38 சனி

## நிலமண்டில ஆசிரியப்பா.

தமிழ்மா ஞாலம் தாங்கிய சான்றோர்
அமிழ்தெனக் கைக்கொண் டாங்காங் களித்த
வெகுவித நீதிகள் விளங்கிடு நாளில்
தருமா றிஃதெனச் சாலவே போற்றும்
அறுபதா மாண்டின் அழகார் மணமும்
நறுமணந் திகழவே நடப்பது நலமெனத்
திருநிறை செல்வர் செப்பியே செய்யும்
ஒருதிரு மாமணம் உம்நாள் தனிலும்
வெகுதான் யவாண் டதனில் விளங்கியே
உறுமார் கழிமதி உத்ராடத் த்ருதியைச்
சனிநா ளதனிற் சற்சனர் மாசபை
நனிமகிழ் வெய்த நன்மனை திருப்பதி
அம்மாள் தன்னுடன் ஐயநீ வீற்று
நும்மா மனைதனில் நாதன வாத்தியம்
நன்மா மழையென நாளு பேரும்
சொன்மாரி பெயச் ஜோராய் அறுசுவை
உண்டியே உதவி உண்ணவே பார்த்த
கண்ணையே மூடிக் கயகிரி மறந்தாய்
உன்றன தன்மை உளங்கொண் டாடிய
நன்நய மாந்தர் நாளும் நினையுமே.

ஓம் சாந்தி சாந்தி.

அன்பன்,

ஆனைமலை,
26—1—39.

S. ஆதிநாராயணன் பிள்ளை,
உபாத்தியாயர்.

ஆனைமலை, மாஜி-மு. மணியம்

A. S. குப்புசாமி பிள்ளை அவர்கள் கூறிய

# இரங்கற்பா.

முருகன் துணை.

ஆறுமுக மென்றளவி லச்சந் தவிர்க்குமே
வேறுவினை வந்தால் விலக்குமே—கூறுபுகழ்
மாரியொத்த சூரபத்மன் மார்பிளக்க வேதொடுத்த
வீரசத்தி யான்மிகுத்த வேல்.

பசுபதிநாதர் துணை.

உன்னைப் பணிந்தே யுனக்கடிமை யாயினான்
தன்னைக் கருணைபுரிந் தீடேற்றாய்—கன்னியுமை
வாமா பசுமலையின் வாசா வலர்ந்த கொன்றைத்
தாமா பசுபதிநா தா.

சுந்தர்புரி சுந்தரரே சுற்றமுடன் நண்பரும் போய்
வெந்தபுரி யாகி விட்டீரோ—சுந்தரமே
ஆழாழி நஞ்சுண்ட ஆபத் சகாயனது
காலால் உதையுண்டான் கண்டு.

சுந்தர்புரிச் சுந்தரமே சுருதிநூற் புராணம் யாவும்
சொந்தமா யுளத்திற் கொண்ட தோன்றலே சுகுணக்
தந்தையும் தாயுமாகித் தமியரை யாண்டுவந்த [குன்றே
செந்தளிர்க் கழல்கள் என்றும் சிந்தையில்
[வைப்போம் யாமே.

ஆனைமலை,
25—1—36.

அன்பன்,
A. S. K. சாமி.

## A. K. இராமலிங்கம் பிள்ளை கூறிய

# இரங்கற்பா.

(பண்டித மோதிலால் என்ற மெட்டு.)

நாடுபுக ழானைமலை நாமசுந்தரா
நாம சுந்தரா—திரு—வாச மந்திரா. (நாடு)

நேரிலுமைக் காண்பதற்கும்
நீதிமொழி கேட்பதற்கும்
பாரிலுள்ளோர் ஏங்கிநின்று பரதவிக்கிறார்
பரதவிக்கிறார்—மனம்—பதட்டமெய்துரார். (நாடு)

தொகையரா.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தேழாண்டினிலே
ஆழிநதிக் கரை ஓரத்தை
அழகுமிகும் சுந்த்ரபுரி என்னுமொரு
தெருவாக்கி அதிலே பின்னும்
நேயமொடு நாகநக ரார் நினைக்க
டாக்கி ஒன்று நியமித்து முப்பானொன்ப
தாயதொரு ஆண்டினிலே அடங்கினார்
அதில்த்தானே அந்தோ அந்தோ.

பாட்டு.

ராமலிங்கம் இசையே பாட
நாள் சங்க ராந்தி யாக
சோமேசர் தன் அருளால்
சுவர்க்கம் வாழ்குவீர்
சுவர்க்கம் வாழ்குவீர்—பிறவி—தவிர்க்க மாகுவீர். (நாடு)

A. K. இராமலிங்கம் பிள்ளை,
ஆனைமலை.

**25—1—39.**

# அநுதாபக் கடிதம்.

திருவாளர், ஸ்ரீ வெங்கடாசல முதலியார்
அவர்கள் சமுகம்.

உடுமலே M. குமரகுருவேல் வந்தனம்.

"நுண்ணிதே யாயினும் எண்ணித் துணிக" என்ப, பலகால் என் அகத்தே தோன்றி மறைந்து வந்த ஓர் எழுச்சியை, உண்மையும் தன் நம்பிக்கையும் கொண்டு எழுதிய மனுவுக்கு, பதிலுத்திரம், நமது தந்தையார் எழுதியிருந்த தன்மைக்கொப்ப, சாலவே ஒப்பி, கடிதம் கிடைத்த ஈராம் நாள் ஞாயர் இங்கிருந்து புறப்பட்டு ஆனைமலையுற்றேன்.

அவ்வமயம், என்னால் செவி மடுத்த மொழி, கொடும் வன்மை இடியைவிடக் கடுமையாக, என் மனதகத்தே தாக்கிற்று. அந்தோ கலிகால விளைவும், ஆண்டவன் சோதனையும்தான் என்னே! நேற்று என்னை வரும்படி எழுதியவர் இன்று என் வருகைக்குள் மண்ணிற்குள் மறைந்தனரே. அடதெய்வமே! கொடுமை, கொடுமை கரையிலா நீர்சூழ் கடலானது பொங்கி வரும்போது, மேருகிரி சரிந்து விழ அத்தோடு அண்டமும் இடிந்து விழுந்த மாதிரியன்றோ ஆயிற்று?

பன்முறை என் சிந்தனைக்குப்பின் ஆய்ந்து வரைந்த என் இரு கடிதங்கட்கும் பிறகு நும் பிதா ஓர் பதிலிறுத்தார். அதைக் கண்ணுற்று ஆங்குவர அன்னார் மரித்தார் என்றால், அக்ஷணம் என் மனோநிலையிருந்த தன்மையினை விளக்கப்போதிய தகுதி வாய்ந்த சொல் எனக்கு அகப்படாதகன்றது. கூர்ந்து மொழியுங்கால் "இடியோசை செவி மடுத்த சர்ப்பம்" எத்தன்மையாய மனவியல்புடன் இருக்குமோ அதற்கு உவமை கூறலாம்.

"இன்றைக் கிருப்பவரை நாளைக்கு இருப்ப ரென் றெண்ணவோ திடமில்லை" எனும் திரு வாக்கையும், "கட்டுங் களமு மந்தக் காலன் வரும்போ தெதிர்த்து வெட்டுந் தளமாமோ" எனும் தாயுமானவர் அருளையும், "காண்பதெல்லாம் மாய்மாலம், கனக சம்பத்தென்பது வெறும் ஜாலம்; பணம் பணமென்பது பைத்தியக் கோலம், சீமானும் ஏழையும் செல்வதே ஒரு காலம்" எனும் அனுபவ மொழியையும், மெய்ப்பிக்கவே வந்தவர் போல நமது தந்தையார் மண்ணுலகை நீத்து விண்ணுலகேகினர். சர்வ போகங்களும் நிறைந்திருந்தும், அவர் பொறுப்பில் நிகழ வேண்டிய காரியங்கள் அநேகமிருந்தும், இன்னும் சில வருஷங்கள் உயிருடன் வாழா தொழிந்தமை நோக்கிற் றமக்கு ஆண்டவன் அருளிய தவப்பேறு அம்மட்டுந்தான் போலும்!

அன்பரே, கறந்தபால் மடியேறுமோ? சென்ற காலம் மறுமுறை வருமா? நாழிகொண்டு ஆழமாக அமுக்கி முகக்கினும் நாழிக்குமேல் அதிகம் கொள்ளுமோ? எஞ்ஞான்றும் கொள்ளாது; ஏன்? தேவர்கள் அருந்தும் அமிர்தமானாலும் அளவுக்கு மிஞ்சிக் கொள்ள முடியுமா? முடியாது.

ஆதலால், அதே கவனம் கருத்தில் கொண்டு கவலைபூண்டு, காரியங்களை கவனிக்கா தொழிதலால், நாம் அடையும் பலன் என்னே! கருணைமய கர்த்தவ்ய கிருபா நிதியின் சிருஷ்டியில் உண்டாயவும், ஒரு குறிப்பிட்ட கால வரையரைக்குட்பட்டே, ஜனிக்கின்றன. பிறப்புடன் பிறப்பது இறப்பு; இது சிருஷ்டி நியதி; இயற்கை விதி.

தங்கள் பிதா இவ்வியன்தரு மா ஞாலத்தைத் தான் நீங்கப் போவதை, தனது அனுபவ முதிர்ச்சியினாலும், உதார குணத்தினாலும் அறிந்தே, தன் இருதி

நாளில், தனது ஞாபகார்த்தமாகவும், தன் கவனிப்பில் என்னையும் கொஞ்சம் பொறுப்பேற்றுக்கொள்ளும்படி சொல்லுந் தன்மையில், 11—1—39-ல் எனக்கொரு லிகிதம் வரைந்தார் போலும்.

"Joy often Comes after sorrow, Like morning after night"-இன்ப-துன்பம், இரவு-பகல் என்பவைக்கு சமம். ஆகவே ஆங்கில அறிஞன், ஷேக்ஸ்பியர் மொழிவதையொப்ப, "Don't give place to sorrow more than one minute in mind" மனிதன் உலக விவகாரங்களில் சம்மந்தம் வைத்துக்கொண்டிருக்கும் வரை கவலை கொள்ளாம லிருத்தல் முடியாது. என்றாலும், வாழ்வான நாளை கவலைக்கே யிருப்பிடமாக விட்டு விடாமல், ஆழ்ந்து சிந்தித்து நீக்குவதே சாலச் சிறந்தது.

ஆகையால், அன்பரே, தாங்கள் இதைக் கூர்ந்து நோக்கி, உண்மை தெளிந்து, செய்வனவற்றைச் செம் மையுடன் சிறப்பாகச் சீக்கிரம் ("Never put off till to-morrow what you Can do to-day" என்ப) செய்து முடித்தலே அறிவுடையோர் தழுவும் முறை. அதை விடுத்து, அரும் பெரும் நாட்கள் அபலமாய் போக, மதிப்பிலா வாழ்நாள் மதிப்பற்றுப் போகவும், செய்யாமல் எதையும் "நாளை" என்னும் சொல்லை அறவே தள்ளி, "இன்று" நம்மால் முடிவதை செய் வோம் என்பதாக சீர்திருத்திக்கொள்ளும்படி அன் புடன் கேட்டுக்கொண்டு என் நிகழுமான மொழியை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

"Punctuality begets Confidence"

Yours most faithfully,

**M. K. G. Vel.**

A. V. சுந்தர முதலியார் அவர்கள் காலஞ் சென்றமை காரணமாய

# இரங்கற்பா.

(ஆறுமுக வடிவேலவனே என்ற மெட்டு.)

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும்—இவர்
நன்றெனச் செய்தவை முற்று முரைத்திட
நாவல லல்லவரே.

உள்ளன்பு காட்டும் முகம் உடையார் உயிர்
ஒன்றியே ஏழைகள் பால்—இவர்
கள்ளங் கபடின்றிப் பேசி அவர்களின்
கஷ்டத்தை நீக்கிடுவார்.

நாவினில் வேத முடையவர் கையில்
நலந்திகழ் உருத் திராக்கம்—கோயில்
மேவியே தேவாரப் பாட்டிசைப்பார் கேட்டால்
மேனி சிலிர்த்துவிடும்.

பூமியினும் மிக்க பொறையுடையார் பெறும்
புண்ணிய நெஞ்சினரே—எனில்
காமதமின்றித் திருத்துவர் ஆட்களைத்
தப்பிதம் செய்திடுங்கால்.

நல்லறம் நாடிய மனிதர்களை வாழ்த்தி
நயம்புரிவார் சுந்தரம்—அவர்
அல்லவர் ஆயின் அவரை விரட்டிப்பின்
ஆனந்தக் கூத்திடுவார்.

கற்றைச் சடைமதி வைத்த கடவுளைக்
கைதொழுவார் சுந்தரம்—கையில்
ஒற்றைத்திகிரி கொண் டேழுல காண்டிடும்
ஒருவனையும் தொழுவார்.

யோகத்திலே வெங்கடாசலத் தோடு
உண்டுமே பெண் மக்களும்—உயர்
போகத்திலேயும் சிறந்து விளங்க ஓர்
பொன்னுத் தையு முடையார்.

விண்புகழ் வேதநாயகமே தந்த
விறன் மகனும் சுந்தரம்—அவர்
தேகம் மறையினும் புகழ் மறையாமல்
சீருறுவார் சுந்தரம்.

இங்ஙன்,

**ஓர் அன்புளம்.**